# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 50/37—1973 මාර්තු 15 වැනි බ්‍රහස්පතින්දා—1973.03.15

50/37 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 15 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(24)/73.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் முதலமைச்சரின் விதப்புரையின் மேல் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

**வி. கொபல்லவ,**
**சனாதிபதி.**

கொழும்பு,
1973 ம் ஆண்டு மாச்சு மீ 15 ந் உ.

**ஒழுங்குவிதி**

எழுத்திலான வேறெந்தச் சட்டத்திலும் எது எவ்விதமிருப்பினும், குளியாப்பிட்டி நகரசபையினது அலுவல்களின் நிருவாகம், 1973, மாச்சு 15 ஆம் திகதியிலிருந்து இந்த ஒழுங்குவிதி எவ்வளவு காலத்துக்கு வலுவிருக்கின்றதோ அவ்வளவு காலத்துக்கு மட்டும், அக்காலத்துக்கு மட்டுமே, திரு. கிரிபண்டா சத்குமார அவர்களுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க குளியாப்பிட்டி நகரசபையினது அலுவல்களின் நிருவாகம் உரித்தாக்கப்பட்டிருக்கும் சொல்லப்பட்ட திரு. கிரிபண்டா சத்குமார அவர்கள், முற்கூறப்பட்டுள்ள காலத்தின்போது, நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறெதும் சட்டத்தின் கீழ் அந்த நகரசபையினதும் அதன் தவிசாளரினதும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது